
# மாலை முரசு

பக்கங்கள் 12

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 32 வியாழக்கிழமை 17.08.2023 அதிர்வு 17


## குளவி கொட்டியதால் ஒருவர் உயிரிழப்பு



நுரைச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தழுவ நிர்மலபுர பகுதியில் நேற்று மாலை குளவி கொட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

04

# குருந்தூர்மலையில் புதிய சிவன் ஆலயம்

## பௌத்தர்களும் இந்துக்களும் சேர்ந்து அமைப்பர் என யாழ். நகரில் அறிவிப்பு







- எஸ்.நிதர்ஷன்-

குருந்தூர்மலையில் இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ள நிலைமையில் பௌத்தர்களும் இந்துக்களும் இணைந்து குருந்தூர்மலையில் சிவன் ஆலயம் ஒன்றை அமைக்கத் தீர்மானித்துள்ளனர் என இரு தரப்புப் பிரதிநிதிகளும் கூட்டாக இணைந்து அறிவித்துள்ளனர்.

03

## இஸ்ரேலுக்குள் நுழைய முயன்ற 7 இலங்கையர் ஜோர்தானில் கைது

சட்டவிரோதமான முறையில் இஸ்ரேலுக்குள் நுழைய முயன்ற ஏழு இலங்கையர்கள் ஜோர்தானில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

04

## நிலாவெளி விகாரையின் நிர்மாணம் நிறுத்தம்: சம்மந்தபட்ட விகாராதிபதிகளுக்கு கிழக்கு ஆளுநர் நேரில் விளக்கம்

திருகோணமலை – நிலாவெளி பெரியகுளம் பகுதியில் நிர்மாணிக்கப் படவிருந்த பௌத்த விகாரையின் நிர்மாண பணிகளை இடைநிறுத்தியமை தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்

04

## சாதாரண தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் நாளை ஆரம்பம்!

கடந்த ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தர பரீட்சையின் முதலாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் நாளை ஆரம்பமாக வுள்ளன என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

04

## சு.கவின் ரணில் ஆதரவாளர்களுடன் மைத்திரிபால விசேட கலந்துரையாடல்

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கும் ரணில் அரசுக்கு ஆதரவளிக்கும் சு.கவின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல்

04

## பிரபாகரனின் குடும்பத்தை வைத்து அரசியல் செய்வதை நிறுத்துங்கள்!

### புலம்பெயர் தமிழர்களிடம் பொன்சேகா கோரிக்கை





விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் குடும்பத்தை வைத்து அரசியல் செய்வதை உடனடியாக நிறுத்துமாறு புலம்பெயர் தமிழர்களிடம் முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேட்டுக்கொண்டுள்ளார்.

04

## நாடாளுமன்றக் குழு அறையில் இரு தலையணைகள், மெத்தை

### எப்படி, எதற்காக வந்தன என்று விசாரணை



நாடாளுமன்றத்தின் குழு அறையில் இரண்டு தலையணைகள் மற்றும் மெத்தை ஒன்று காணப்பட்டன எனவும், அவை எதற்காக இந்த அறைக்குக் கொண்டு வரப்பட்டன என்பது குறித்துக் கண்டறியப்படும் எனவும் நாடாளுமன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

04




வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டைமானாறு செல்வச் சன்னிதி ஆலய திருவிழா நேற்று (16) பிற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

# "ஆரோக்கியமான உணவு உட்கொள்வோம்" என்னும் தொனிப் பொருளில் நிகழ்வுகள்



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனைஸாஹிராதேசியக்கல்லூரி தரம் 7 மாணவர்கள் "ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்வோம், மகிழ்ச்சிகரமாக வாழ்வோம்" எனும் தொனிப் பொருளில் நிகழ்வொன்றை ஒழுங்கு செய்திருந்தனர்.

கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் வழிகாட்டலில் தரம் 7 பகுதித் தலைவர் ஏ.எல்.எம்.ஹக்கீம் தலைமையில் வகுப்பாசிரியர்கள், பாட ஆசிரியர்கள், மற்றும் மாணவர்களின் பங்களிப்புடன் நிகழ்வு இடம்பெற்றது.

வைத்தியர் ஸனூஸ்காரியப்பர், வைத்தியர் ஏ.எல்.பாறூக், வைத்தியர் எம்.என்.எம்.தில்ஸான் ஆகியோர் விருந்தினர்களாக இதில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் சிறப்புரைகளை வைத்தியர்கள் மிகவும் பயனுள்ள வகையில் மாணவர்களுக்கு முன்வைத்தார்கள்.

ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்வதின் முக்கியத்துவத்தையும் உடன் உணவுகளை உட்கொள்வதின் பிரதிகூலங்களும் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் தரம் 7 மாணவர்களுக்கும் மற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் இலைக்கஞ்சி வழங்கப்பட்டதுடன் ஆரோக்கியமான உணவுகளும் பரிமாறப்பட்டன.





# ஆலயத்துக்கு அலங்கார வளைவு

(மன்னார் நிருபர்)

மன்னார் நானாட்டான் ஸ்ரீ செல்வ முத்து மாரியம்மன் ஆலயத் திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று (16) ஆரம்பமாகியது. அதன் போது அலங்கார வளைவும் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் நானாட்டான் பிரதேசத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்து மாரியம்மன் ஆலயத்தில் இந்த நிகழ்வுகள் ஆலயத்தின் திருவிழா பிரதம குரு சி.ஸ்ரீ சண்முகநாத குருக்கள் தலைமையில் நடைபெற்றன.

# சுற்றாடல் கழக மாணவர்களுக்கு சின்னம் சூட்டல் நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் சுற்றாடல் கழக மாணவர்களுக்கு சின்னம் சூட்டலும் தொப்பி அணிவித்தல் மற்றும் அடையாள அட்டை விநியோகமும் கல்லூரி அதிபர் ஐ.உபைதுல்லா தலைமையில் கல்லூரி திறந்தவெளி




அரங்கில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் 25 மாணவர்கள் இந்தச் சுற்றாடல் கழகத்தில் இணைந்து சூழலைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சுற்றாடலை பாதுகாப்போம் சுற்றாடல் நம்மை பாதுகாக்கும் எனும் தொனிப்பொருளில் மாணவர்கள் மத்தியில் விசேட உரை நிகழ்த்தப்பட்டது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**குருந்தூர்...**

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் குருந்தூர்மலை, யாழ் நாக விகாரை, தையிட்டி, நாவற்குழி உள்ளிட்ட விகாரைகளின் விகாராதிபதிகளும் மறவன்புலவு சசிசிதானந்த்தின் சிவ சேனை உள்ளிட்ட இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோரும் யாழ். நாகவிகாரையில் ஒன்று கூடி கலந்துரையாடலில் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

யாழ் நாகவிகாரையின் விகாராதிபதி மற்றும் மறவன்புலவு சச்சிதானந்தம் ஆகியோரின் தலைமையில் இன்று காலை ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கலந்துரையாடல் மதியம் வரையும் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலுக்கு ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனினும் கலந்துரையாடலின் முடிவில் அனைவருமாக இணைந்து ஊடக சந்திப்பொன்றை அங்கு நடாத்தியிருந்தனர். இதன் போது இந்து மற்றும் பௌத்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் தங்களது கலந்துரையாடல் குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டனர்.

இதன் போது சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் கருத்து வெளியிடுகையில் –

குருந்தூர்மலை விகாராதிபதி தாமாக முன்வந்து அங்கு சிவன் ஆலயம் ஒன்றை அமைக்குமாறு என்னிடம் சொல்லியிருந்தார். அதற்கமைய இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் இங்கு வந்திருந்த அந்த விகாராதிபதி அவ்வாறு சிவன் ஆலயத்தை அமைக்க வேண்டுமென்பதை பகிரங்கமாகவே உறுதி செய்திருந்தார்.

குறிப்பாக இந்து மற்றும் பௌத்த மதப் பிரதிநிதிகள் என நாங்கள் பலரும் இருக்கத்தக்கதாகவே சிவன் ஆலயமொன்றைக் கட்டுவோம் எனக் கூறினார். அதனால் இந்த விடயம் குறித்துத்தான் நாங்கள் இங்கு கலந்துரையாடியிருந்தோம்.

அதைத் தவிர வேறு எந்தவிதமான தீர்மானங்களையும் இங்கு நாங்கள் எடுக்கவில்லை.

ஆனால் அதை எங்கு கட்டுவது, எப்போது கட்டுவது என்பது குறித்து பேசவில்லை. ஏனெனில் சிவன்கோவில் கட்டுவது ஒரே நாளில் கட்டி முடிக்கிற விடயமல்ல. அதற்கு இடம் கண்டுபிடிப்பதுடன் இன்னும் பல செயற்பாடுகள் முன்னெடுக்க வேண்டியதாக உள்ளது.

இங்கு புத்தர்களை அழைத்து அவர்களாகவே சிவன் ஆலயம் அமைப்பது குறித்து சொல்லியிருக்கிறார்கள். அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் பின்னர் பார்த்துக் கொள்ளுவோம்.– என்றார்.

இதேவேளை நாளையதினம் குருந்தூர் மரையில் இந்துக்களின் பொங்கல் ஒன்று நடைபெற உள்ளதாக அறிவித்தல் வெளியாகியிருக்கிற நிலைமையில் இதனைத் தடுக்க முன்வர வேண்டுமென சிங்கள மக்கள் வாழுகின்ற பகுதிகளில் நோட்டீஸ்களும் ஒட்டப்பட்டு ஒரு பரபரப்பான நிலைமை அங்கு ஏற்பட்டுள்ளது.

இந்துக்களும் பௌத்தர்களும் அங்கு முரண்பட்டு வருகின்ற சூழலில் இந்து பௌத்த மத தலைவர்கள் சிவன் ஆலயம் அமைப்பது தொடர்பில் இணக்கம் ஏற்படுத்தியுள்ளதாக கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சாதாரண...**

மதிப்பீட்டு பணிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளன என பரீட்சைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் லசிக சமரகோன் தெரிவித்துள்ளார்.

இந்த மதிப்பீட்டு பணிகள் பாடசாலை விடுமுறைநாள்களில்மேற்கொள்ளப்படுவதால் எந்தவொரு பாடசாலையும் மேலதிகமாக மூடப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

---

**குளவி கொட்டியதால்...**

இந்நபர் வீட்டிற்கு வெளியில் நின்று கொண்டிருந்த போதே இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

---

**இஸ்ரேலுக்குள்...**

இந்த ஏழு இலங்கையர்களும் நேற்றுப் புதன்கிழமை எல்லை தாண்டியபோது கைது செய்யப்பட்டனர் என ஜோர்தான் இராணுவ இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

ஜோர்தான் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட ஏழு இலங்கையர்களும்

அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர் எனவும் அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

சமீபத்திய ஆண்டுகளில், ஜோர்தானிய - இஸ்ரேல் எல்லையில் பணிபுரிய ஆபிரிக்கா, ஆசியா மற்றும் துருக்கியைச் சேர்ந்தவர்கள் அங்கீகரிக்கப்படாமல் நுழைந்தனர் எனப் பல வழக்குகள் பதிவாகியுள்ளன.

கடந்த வருடம் இஸ்ரேலுக்குள் பிரவேசிக்க முயன்ற 52 பேர் கைது செய்யப்பட்டனர் எனவும், இந்த வருடத்தின் முதல் காலாண்டில் 23 பேர் கைது செய்யப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

---

**பிரபாகரனின்...**

பிரபாகரனின் மனைவி மதிவதனி மற்றும் மகள் துவாரகா ஆகியோர் உயிருடன் இருக்கின்றனர் எனவும், அவர்களைத் தான் நேரில் சந்தித்தார் எனவும் வெளிநாடொன்றில் வசிக்கும் மதிவதனியின் சகோதரி ஒருவர் சமூக வலைத்தளங்களில் காணொலியொன்றை அண்மையில் வெளியிட்டிருந்தார். அந்த வீடியோ வைரலாகியுள்ளது. இந்நிலையிலேயே முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

"இறுதிப் போரில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும், அவரின் மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் உயிரிழந்துவிட்டனர். இது அனைவரும் அறிந்த உண்மை. இந்நிலையில், பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்று ஒரு குழுவினரும், பிரபாகரனின் மனைவி மற்றும் மகள் உயிருடன் இருக்கின்றனர் என்று இன்னொரு குழுவினரும் தமது சுயலாப அரசியலுக்காகப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

புலம்பெயர் தமிழர்களே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களிடம் நாம் விநயமாகக் கேட்டுக்கொள்வது என்னவெனில், உங்கள் சுயலாப அரசியலுக்காக உயிரிழந்த பிரபாகரனின் குடும்பத்தை வைத்து அரசியல் செய்வதை உடனடியாக நிறுத்துங்கள்." - என்றார்.

---

**சு.கவின் ரணில்...**

நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் கொழும்பு - ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருட பூர்த்தி கொண்டாட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதுதவிர, நாட்டின் தற்போதைய நிலைவரம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

---

**சம்பந்தப்பட்ட...**

சம்மந்தபட்ட விகாராதிபதிகளுக்கு தெளிவுப்படுத்தியுள்ளார்.

பௌத்த விகாரையின் நிர்மாணப் பணிகளை நிறுத்துமாறு கோரி பொது மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வந்த நிலையில், இவ்விவகாரத்தால் இனமுரண்பாடு ஏற்படும் என கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டமையடுத்து, விகாரையின் நிர்மாண பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அரசியல்வாதிகள் பலர் தொடர்ச்சியாக அழுத்தங்களை பிரயோகித்து வந்த நிலையில், தனது முடிவில் உறுதியாக உள்ளார் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பலாங்கொடை மிரிஷ்வத்த தம்மானந்த பிரிவென விகாரையின் கிளையான பலப்பிட்டிய அம்பருகாராமய விகாரையின் கிளை விகாரையான நிலாவெளியில் அமைக்கப்படவிருந்த விகாரை தொடர்பாக, உரிய விகாரைகளுக்குச் சென்று, அங்குள்ள விகாராதிபதிகளை சந்தித்து இப்பிரச்சினை குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விளக்கமளித்துள்ளார்.

இதன்போது விகாரையின் விகாராதிபதி விமல தம்மா மஹாநாயக்க தேரரை சந்தித்து கிழக்கு மாகாண ஆளுநர் என்ற வகையில் விகாரை அமைப்பதால் ஏற்படும் சிக்கல்கள் குறித்தும் ஆளுநர் தெளிவுப்படுத்தியுள்ளார்.

மேலும் நிலாவெளி, இலுப்பை குளம் பகுதி மக்களின் ஆதரவுடன் விகாரை அமைக்கப்படாமல், எதிர்ப்புக்கு மத்தியில் விகாரை அமைக்கப்படும் சந்தர்ப்பத்தில் இனங்களுக்கிடையிலான முறுகல் நிலை ஏற்படுவதினை தடுக்க ஆளுநர் என்ற வகையில் தனது கடமையைத் தாம் செய்துள்ளார் எனவும் ஆளுநர் விளக்கமளித்துள்ளார்.

எனவே இவ்விடயம்தொடர்பாக அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி சுமூகமான தீர்வினை பெற்று தருவதன் மூலம் இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையை பலப்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

---

**நாடாளுமன்ற...**

நாடாளுமன்ற மேற்பார்வையாளர் ஒருவர் நாடாளுமன்ற வளாகத்தின் குழு அறைகளை ஆய்வு செய்த போது இந்த இரண்டு தலையணைகள் மற்றும் மெத்தை கண்டுபிடிக்கப்பட்டன.

நாடாளுமன்றத்தின் ஹவுஸ் கீப்பிங் திணைக்களத்தில் சில பெண் பணியாளர்கள் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்டது. அதன் விளைவாக குழு ஒன்று அமைக்கப்பட்டு அக்குழுவால் அறைகள் சமீபத்தில் சோதனை செய்யப்பட்டன.

இதேவேளை பாலியல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழு தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருகிறது.

இது தொடர்பாக பெண் ஊழியர்கள் உட்பட ஏறத்தாழ 20 பேரின் வாக்குமூலங்களை குழு ஏற்கனவே பதிவு செய்துள்ளதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்த விசாரணைகளுக்கு இடையூறு விளைவிப்பதற்கும், செல்வாக்கு செலுத்துவதற்கும் அதிகாரிகள் குழுவொன்று இரகசியமாக செயற்பட்டு வருவதாகவும், அது தொடர்பில் நாடாளுமன்ற அதிகாரிகள் விசேட கவனம் செலுத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி அறிக்கை வழங்குமாறு விசாரணைக் குழுவிற்கு அண்மையில் நாடாளுமன்றத்தின் தலைமைச் சட்ட அதிகாரி திருமதி குஷானி ரோஹணதீர ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட சபை உறுப்பினர் திருமதி ரோஹினி குமாரி விஜேரத்னவிடம் கேட்டபோது, பெண் ஊழியர்கள் பலர் இந்த சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற அதிகாரிகள் குழுவிற்கு எதிராக வலுவான சாட்சியங்களை வழங்கியமையால், எம்.பி.க்கள் மற்றும் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விசாரணை முடிவுகளை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர். துஷ்பிரயோகத்திற்கு ஆளான தொழிலாளர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றார்.




# வட இலங்கை கடற்றொழிலாளர்களைப் பாதிக்கும் இழுவை மடி தொடர்பில் தீர்வு பெற்றுத் தாருங்கள்

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் ஆலம் தமிழ் நாட்டு முதலமைச்சரிடம் கோரிக்கை

(மன்னார் நிருபர்)

தமிழ் நாட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தமிழ் நாட்டு கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில், தமிழ் நாட்டில் இருந்து அத்து மீறி வந்து வட இலங்கை கடற் தொழிலாளர்களை பாதிக்கும் இழுவை மடி படகு தொடர்பாக கலந்துரையாடி அதற்கான தீர்வுகளையும் முன்னெடுப்பார் என்று வட இலங்கை மீனர்வர் களாகிய நாம் எதிர் பார்க்கின்றோம்.

இவ்வாறு வட இலங்கை கடற் றொழிலாளர்களின் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக வட இலங்கை கடற் றொழிலாளர்களின் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் பிரதிநிதிகள் சார்பாக வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் என்.எம்.ஆலம் நேற்று (16) ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு–

தமிழ் நாட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் எதிர்வரும் 18 ஆம் திகதி (நாளை) தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்களுடன் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளார்.

இந்தச் சந்திப்பில் தமிழ் நாட்டில் இருந்து அத்துமீறி வந்து வட இலங்கை கடற் றொழிலாளர்களைப் பாதிக்கும் இழுவை மடி தொழிலில் மீனவர்கள் ஈடுபடுவது தொடர்பாகக் கலந்துரையாடி அதற்கான தீர்வுகளையும் முன்னெடுப் பார் என வட இலங்கை மீனர்வர் களாகிய நாம் எதிர்பார்க்கின்றோம்.

வட இலங்கையின் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, மற்றும் முல் லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங் களைச் சேர்ந்த ஏறத்தாழ இரண்டு லட்சம் மக்கள் இந்தக் கடற்றொழிலை தமது வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர்.

30 வருட கால யுத்தத்தால் சொல்ல முடியாத துயரங்களையும் அழிவு களையும் நாங்கள் சந்தித்திருந்தோம். யுத்தம் காரணமாக வெளி மாவட் டங்களிலும் தென்னிந்தியாவுக்கும் தொடர்ச்சியான இடப்பெயர்வுகளை மேற்கொண்டோம். உயிர் மற்றும் உடைமை இழப்புக்களையும் சந்தித் திருந்தோம்.

யுத்தததுக்குப் பின் எமது வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தை மீள கட்டி யெழுப்ப கடுமையாக முயற்சித்த போதி லும் பல சவால்களையும் தோல்விகளை யும் நாம் சந்திக்க நேர்ந்தது.

வருமானத்தின் வீழ்ச்சி மற்றும் பெரும் கடன் சுமை காரணமாக எமது இளந்தலைமுறை கடற்றொழிலையே கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

யுத்தத்துக்குப் பின்பான இந்த சமூக பொருளாதார சூழலுக்கான முக்கிய காரணம் தமிழ்நாட்டு இழுவைப்படகு கள்.

இந்த இழுவைப்படகுகள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி வலைகளை அறுத்து செல்வதால் பெரும் இழப்புகள் ஏற்படுகின்றன.

மேலும் சொத்து இழப்புக்களை தவிர்க்க நாம் இழுவைப்படகுகள் வரும் நாள்களில் கடலுக்கு போகாமல் இருப்ப தால் பெருமளவான வருமானத்தை இழக்கின்றோம்.

கடல் வளங்களை சுரண்டும் இழுவை மடிகளால் சிறு மீனவர்களின் வாழ் வாதாரம் பாரிய வீழ்ச்சியை எட்டியுள்ளது. இழுவை மடி முறையால் வட இலங்கை மற்றும் தமிழ்நாடு சிறு கடற்றொழிலார் களின் எதிர்காலமே அழிக்கப்படு கின்றது.

பல போராட்டங்களுக்கும் கலந்துரை யாடல்களுக்கும் பின்னர், 05 நவம்பர் 2016 அன்று இந்திய மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர்கள், கடற் றொழில் அமைச்சர்கள் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் இடையே நடை பெற்ற பேச்சில் எடுக்கப்பட்ட இணைந்த தீர்மானம் முக்கியமானது. அந்த தீர் மானத்தில் "விரைவில் கீழ்மட்டத்தில் இழுத்து செல்லும் நடைமுறையை முடிவுக்குக் கொண்டு வருவது" மற்றும் "ரோந்து சுற்றுதலுக்கு ஒத்துழைப்பிற் குச் சாத்தியங்களை ஆராய்ந்தறிதல்" என்ற முக்கியமான முடிவுகள் எடுக்கப் பட்டன.

தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் தலைமையில் 18 ஆம் திகதி இடம்பெறவிருக்கும் மாநாட்டில், 05 நவம்பர் 2016 அன்று எடுக்கப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் இழுவை மடி பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் நடைபெறும் என எதிர்பார்க்கிறோம்.

இழுவை மடி பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்காக இரு நாட்டு கடற்றொழிலாளர்களுக்கு இடையில் 05 நவம்பர் 2016 அன்று எடுக்கப் பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் கலந்துரையாட நாம் தயாராக உள் ளோம். – என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மகத்தான மருத்துவ சேவை

இலங்கையின் மருத்துவ சேவை தொடர்பில் இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் முக்கிய எச்சரிக்கை ஒன்று விடுக்கப்பட்டிருக்கின்றது.

அரசு நிர்வாகிகளும், சுகாதாரத்துறை அதிகாரிகளும் விரைந்தும் மிக உன்னிப்பாகவும் அவதானிக்க வேண்டிய விடயம் இது.

நாட்டின் பொருளாதாரச் சீரழிவினால் மருத்துவ - சுகாதார சேவைகளும் பெருமளவில் சீர் கெட்டிருக்கின்றன. ஒருபுறம் மருந்துப் பொருள்கள், வைத்திய உபகரணங்கள் இன்மையால் மருத்துவ சேவை மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்றால் மறுபுறம் மருத்துவ சேவையாளர்கள், மருத்துவர்கள் இன்மையால் அச்சேவை மேலும் பலத்த பின்னடைவைச் சந்திக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பின்புலத்தில்தான் கடந்த இரண்டு ஆண்டுகளில் 2 ஆயிரம் மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர், இன்னும் ஐயாயிரம் மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறத் திட்டமிட்டுள்ளனர் என்று அரசுக்குத் தகவல் எச்சரிக்கையை வெளியிட்டிருக்கின்றார் இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் மருத்துவர் ஜயந்த பண்டார.

மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றமைக்குப் பல காரணங்கள், பின்னணிகள் உண்டு. அவற்றைப் பற்றி ஆராயாமல், அப்படி வெளியேறும் மருத்துவர்களைக் கறுப்புப் பட்டியலில் சேர்க்கும் நடவடிக்கையை நாடுகின்றது அரச நிர்வாகம் என்று சங்கத்தின் செயலாளர் குறை கூறி இருக்கிறார்.

தினசரி 10 மணி நேரப் பணிக்கு ஊதியம் பெறும் டாக்டர்கள் அதற்குப் பதிலாக 24 மணி நேரமும் பணியாற்றக் கட்டாயப்படுத்தப்படும் சூழலே இப்போது உள்ளது என்கிறார் அவர்.

மருத்துவர்கள் தமது பணியை முன்னெடுப்பதற்கான உரிய உபகரணங்கள், கருவிகள், வசதிகள், மருந்து வகைகள் இங்கு போதுமான அளவில் கிடையா. எல்லாவற்றிற்கும் தட்டுப்பாடு, பற்றாக்குறையே நிலவுகின்றது. பல மருத்துவர்கள் தங்கள் நோயாளர்களுக்குரிய பதிலீட்டு மருந்துகளைத் தேடி அலையும் நிலைமையே உள்ளது என்று அவர் சுட்டிக்காட்டுவதிலும் விடயம் இல்லாமல் இல்லை.

மருத்துவ சேவை என்பது உயிர் காக்கும் தெய்வீகப் பணி. மருத்துவர்களை சமூகம் கடவுளுக்கு நிகரானவர்களாகத்தான் நோக்குகின்றது போற்றுகின்றது.

இத்தகைய உயரிய பணியில் இருப்பவர்களைக் கையாள்வதில் - அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதில் - அரசும் அதிகாரிகளும் பொறுப்பாளர்களும் பெரும் நிதானம் மற்றும் பொறுப்புணர்வைக் கடைப்பிடிப்பது அவசியம். 'எடுத்தோம், கவிழ்த்தோம்' என்று அறிவிப்பு விடுப்பது, கறாராகக் கையாள்வது போன்றவை மருத்துவர்கள் விடயதில் அவசியமற்றவை.

அதேசமயம் கடவுளுக்கு நிகரானவர்களாக மதிக்கப்படும் மருத்துவர்களும் உயர் சகிப்புத் தன்மையுடனும், பொறுப்புணர்வுடனும், சமூக கடப்பாட்டுடனும் செயல்படத் தவறக் கூடாது. அவர்களது தற்போதைய உயரிய சேவை குறைத்து மதிப்பிடக் கூடியது அல்ல. ஆயினும், பொருளாதார நெருக்கடியிலும் பொருள்களின் தட்டுப்பாட்டிலும் மிகுந்த இக்கட்டை நாடு எதிர்கொண்டிருக்கையில் அந்தச் சுமையின் பாரத்தை சமூகத்தின் பிரதான அங்கமாகிய மருத்துவத்துறையும் மருத்துவத் துறையினரும் சேர்ந்து சுமப்பது வரலாற்றுக் கட்டாயம் என்பதை அவர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

# விழிப்புணர்வூட்டல் சைக்கிள் ஓட்டம்




(அஸ்ஹர் இப்றாஹிம்)

போதைப் பொருளிலிருந்து இளைஞர்களை மீட்டெடுத்தல், வீதி விபத்துக்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டல் , இலங்கையின் சுற்றுலா துறையை மேம்படுத்துதல் போன்ற மூன்று விடயங்களை முன்வைத்து நாடு தழுவிய ரீதியில் சைக்கிள் சுற்றுப் பயணத்தை ஆரம்பித்தார் புத்தளம், தில்லையடி இளைஞன் எல்.ஏ.எம்.நப்ஸான்.

புத்தளம், தில்லையடி பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய எல்.ஏ.எம்.நப்ஸான் இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக சைக்கிள் சுற்றுப் பயணத்தை கடந்த செவ்வாய்க் கிழமை புத்தளத்திலிருந்து ஆரம்பித்துள்ளார்.

இவரது இந்த முயற்சியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் புத்தளம் நகரசபை செயலாளர், புத்தளம் வர்த்தக நலன்புரிச் சங்க பிரதிநிதிகள், லெகூன் இளைஞர் அமைப்பினர் மற்றும் பிரதேசவாசிகள் கலந்து கொண்டனர்.

# இலங்கையில் பதிந்த வாகனங்களின் வருமானப் பத்திரம் மத்திய மாகாணத்தில்



இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து வாகனங்களுக்கும் வருமான அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் மத்திய மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என்று மத்திய மாகாண போக்குவரத்து ஆணையாளர் பரமி தன்னகோன் தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஏனைய மாகாணங்களில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் வருமான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவித்துள்ளார்.

இந்த புதிய கணனி பயன்பாட்டின் மூலம் இலங்கையில் உள்ள முழு வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்களும் மத்திய மாகாணத்துடன் இணைக்கப்படவுள்ளன.

தற்போது, வாகனம் பதிவு செய்யப்பட்ட மாகாணத்தின் அனைத்து பிரதேச செயலகத்தில் இருந்தும் வருமான வரி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகல இலங்கையர்களும் தமது சேவைகளை உடனடியாக நிறைவேற்றிக் கொள்வதே மத்திய மாகாண போக்குவரத்து திணைக்களத்தின் நோக்கமாகும் என்றும் மத்திய மாகாண போக்குவரத்து ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# முன்பள்ளியின் சிறுவர் சந்தை

(நூருல் ஹுதா உமர் )

கடந்த 18 வருடங்களுக்கு மேலாக கல்முனையில் இயங்கி வரும் தாருல் அர்கம் முன்பள்ளி பாடசாலையின் 2023 ஆம் ஆண்டுக்கான சிறுவர் சந்தை நிகழ்வு பாடசாலை முகாமைத்துவப் பணிப்பாளர் அமீர பாறுக் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர்கலந்து கொண்டதார். கௌரவ அதிதிகளாக கல்முனை அஸ்-ஸுஹறா வித்தியாலய அதிபர் திருமதி எம்.



எச்.எஸ்.ஆர்.மஜீதியா, அம்பாறை மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் முஹம்மது அஸாருதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுக்கு முன் பள்ளி பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், ஊர்மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருதில் சர்வ மத புத்தாண்டு விழா நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் தேசிய பாடசாலையில் தரம் ஒன்று வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் சர்வ மதங்களின் கலாசார விழிமியங்களை பிரதிபலிக்கும் வகையில் "புத்தாண்டு விழாக்கள்" எனும் தொனிப் பொருளில் நிகழ்வுகளை நடத்தினர்.

பாடசாலை அதிபர் திருமதி றிப்கா அன்ஸாரின் ஆலோசனையின் பேரில் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்திலுள்ள செயற்பாட்டு ரீதியான நிகழ்வுகள் இவ்வாறு இடம்பெற்றன.

நான்கு மதங்களையும் அறிமுகப்படுத்தும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் இனங்களைப் பிரதிபலிக்கும் வகையில் உடைகளை அணிந்து உணவுப் பண்டங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

ஏனைய இனங்களினூடான பரஸ்பர ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் ஆரம்பப் பிரிவிலிருந்தே மாணவர்களுக்கு உணர்த்துவதே இதன் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் றிப்கா அன்ஸார், பகுதித் தலைவர் எம்.எச்.யு.றொஸானா, வகுப்பாசிரியர்களான எஸ்.எம்.அன்வர், ஐ.ரீ.ஏ.ஹமீட், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# கல்முனை ஆழ்கடல் மீனவர் நலன்கருதி தொலைத்தொடர்பு நிலையம் அமைப்பு!

## பைசால் காசிம் எம்.பி. நடவடிக்கை

(கே. எ. ஹமீட், ஏ.எஸ். மௌலானா)

கல்முனைப் பிராந்திய ஆழ்கடல் மீனவர்களின் நலன் கருதி தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கான வேலைத் திட்டத்தை திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொருளாளருமான அல்ஹாஜ் பைசால் காசிம் மேற்கொண்டு வருகின்றார்.

2010 - 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடற்றொழில் அமைச்சராக ராஜித சேனாரத்ன பதவி வகித்தபோது சாய்ந்தமருது பிரதேசத்தில் தொலைத்தொடர்பு நிலையமொன்று அமைக்கப்பட்டது.

எனினும் அது சிறிது காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனைப் பகுதிக்கு மாற்றப்பட்டது என்று பைசால் காசிம் எம்.பி. அண்மையில் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.



இதனைத் தொடர்ந்து கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் பைசால் காசிம் எம்.பி. ஆகியோர் சந்தித்து இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடியிருந்தனர்.

இதையடுத்து இவர்கள் இருவருமாக கல்முனை பிராந்திய மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ். ஸ்ரீரஞ்சனுடன் மேற்கொண்ட தொலைபேசிக் கலந்துரையாடலின் போது கல்முனைப் பிராந்தியத்தை மையப்படுத்தி தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கான திட்ட அறிக்கைகளை உடனடியாக சமர்ப்பிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு தொலைத்தொடர்பு வசதி மிகவும் முக்கியத்துவமிக்க சாதனமாக கருதப்படுகிறது.

ஆழ்கடல் மீனவர்களுடனான தொடர்பாடல்களுக்கும் கடலில் ஏற்படும் அனர்த்தங்களின் போது உயிரிழப்புக்களையும் படகு உள்ளிட்ட பொருள் சேதங்களையும் தவிர்த்து, பாதுகாப்பாக கரை திரும்புவதற்கும் தொலைத்தொடர்பு நிலையமே முக்கிய பங்காற்றுகிறது.

இவ்வாறு மிகவும் அவசியத் தேவையாக உள்ள தொலைத்தொடர்பு நிலையம் இந்தப் பிராந்தியத்தில் இல்லாதிருப்பது பெரும் குறைபாடாகக் காணப்படுகிறது. அதை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் எடுத்துள்ளார். அவர்களுக்கு கல்முனைப் பிராந்திய மீனவர்கள் நன்றியையும் பாராட்டையும் தெவித்துள்ளனர்.

# கைவிடப்பட்ட வீதி புனரமைப்பு: மழையால் குளமாகும் நிலை!



(பாறுக் ஷிஹான்)

பிச்சிபிலாவடி அல்லது வைத்தியர் றிஸ்வி வீதி செப்பனிடுவது இடை நிறுத்தப்பட்டுள்ளது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் இந்த வீதி வெள்ள நீர் தேங்கும் இடமாக மாறியுள்ளது.சிறுவர்கள் முதல் பாடசாலை மாணவர்கள் பெரியோர்கள் என பல தரப்பினரும் இதனால் போக்குவரத்துச் செய்ய முடியாது பாதிக்கப்பட்டுள்ளனர்.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிச்சிபிலாவடி அல்லது வைத்தியர் றிஸ்வி வீதியே அரச நிதி ஒதுக்கீட்டில் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன.

எனவே இந்த வீதியைத் துரித கதியில் நடவடிக்கை எடுத்து புனரமைப்பை மீள ஆரம்பிக்குமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



# வரலாற்றுச் சாதனை படைத்த அடம்பன் மாணவர் கௌரவிப்பு

**(மன்னார் நிருபர்)**

வவுனியாவில் நடைபெற்று வரும் வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுகளில் சாதனை படைத்த அடம்பன் மத்திய மகா வித்தியாலய மாணவர்களை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை (16) காலை பாடசாலையில் இடம் பெற்றது.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுகளில் எறிபந்து போட்டியில் மடு வலயத்திலிருந்து அடம்பன் மத்திய மகா வித்தியாலய 17 வயது பிரிவின் கீழ் ஆண்கள் அணியும், பெண்கள் அணியும் 20 வயது பிரிவின் கீழ் ஆண்கள் அணியும், பெண்கள் அணியும் பங்கு பற்றியிருந்தது.

இந்தப் போட்டியானது கடந்த 13,14 ஆம் திகதிகளில் வவுனியா கனகராயன் குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டிகளில் 20 வயது ஆண்கள் முதலாம் இடத்தையும், 17 வயது பெண்கள் இரண்டாம் இடத்தையும் 17 வயது ஆண்கள் மூன்றாம் இடத்தையும் பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளனர்.

மடு வலயம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடையும் இந்த வேளையில் பாடசாலை ஒன்றிலிருந்து ஒரே குழு விளையாட்டு நிகழ்வில் பங்குபற்றி வடமாகாணத்தில் பலம் பொருந்திய பல அணிகளை தோற்கடித்து மூன்று அணிகள் பதக்கங்களை பெற்றுக் கொண்டமை பாராட்டப்படுகிறது.

பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்ற பாராட்டு நிகழ்வில் மடு வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.கே. வொலன்ரைன் கலந்து கொண்டார்.

சாதனை வீரர்கள் வாத்திய இசையுடன் பவனியாக பாடசாலை மண்டபம் நோக்கி அழைத்து வரப்பட்டனர்.

இதன் போது பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது சாதனை படைத்த மாணவர்கள் விருந்தினர்களால் பதக்கம் அணிவிக்கப்பட்டு, பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.





# சிறுவர் சித்திர போட்டியில் சாதனை



**(வி.ரி.சகாதேவராஜா)**

அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சிறுவர் சித்திரப்போட்டி 2022 யில் சம்மாந்துறை வலயப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் சம்மாந்துறை தாருஸ்ஸலாம் மகாவித்தியாலயத்தில் இருந்து பங்குபற்றி வலய மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் விழா கல்லூரியின் அதிபர் ஏ.ஏ.அமீர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

விழாவில் சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தின் சித்திரப்பாட இணைப்பாளர் எஸ்.எல் அப்துல் முனாப் மற்றும் சித்திர பாட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

# டில்லியில் 7 மக்களவை தொகுதிகளிலும் போட்டி: காங்கிரஸ் கட்சியின் கூட்டத்தில் தீர்மானம்!



எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் டில்லியில் உள்ள 7 தொகுதியிலும் போட்டியிடுவது என காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் மக்களவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இதில் காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆளும் பா.ஜ.கவுக்கு எதிராக போட்டியிட திட்டமிட்டுள்ளன.

இதற்காக, 26 கட்சிகளின் தலைவர்கள் பாட்னா மற்றும் பெங்களூரில் 2 முறை கூடி ஆலோசனை நடத்தினர். இந்தக் கூட்டணிக்கு 'இண்டியா' என பெயர் சூட்டி உள்ளனர்.

இந்த நிலையில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜன கார்கே தலைமையில் ஆலோசனைக் கூட்டம் டில்லியில் நேற்று நடைபெற்றது. இதில் ராகுல் காந்தி உள்ளிட்ட மூத்த தலைவர்கள் பங்கேற் றனர்.

இந்த கூட்டத்துக்குப் பின்னர் காங்கிரஸ் கட்சியின் டில்லி பிரிவு மூத்த தலைவர் அல்கா லம்பா கருத்து தெரிவிக்கையில், இந்தக் கூட்டத்தில் 40 நிர்வாகிகள் பங்கேற்றனர்.

சுமார் 4 மணி நேரம் நடைபெற்ற இந்த கூட்டத்தில், டில்லியில் காங்கிரஸ் கட்சியை பலப்படுத்துவது குறித்து நிர்வாகிகள் தங்கள் கருத்துகளை தெரிவித்தனர்.

பின்னர் டில்லியில் உள்ள 7 மக்களவைத் தொகுதியிலும் காங்கிரஸ் போட்டியிடுவது என முடிவு செய்யப்பட்டது. தேர்தலுக்கு இன்னும் 7 மாதங்களே உள்ள நிலையில், கட்சியின் அனைத்து நிர்வாகிகளும் தேர்தலை எதிர்கொள்ள தயாராக வேண்டும் என்று மூத்த தலைவர்கள் கேட்டுக் கொண்டனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆம் ஆத்மி மூத்த தலைவரும் அமைச்சருமான சவுரப் ரத்வாஜ் கூறும்போது, இந்த விவகாரத்தில் கட்சியின் மத்திய தலைமை முடிவு எடுக்கும். எங்கள் தேர்தல் விவகாரக் குழுவும் இண்டியா கூட்டணி கட்சிகளும் தேர்தல் கூட்டணி குறித்து தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன என்று தெரிவித்துள்ளார்.

# கடலில் மூழ்கி சிறுவர்கள் மூவர் உயிரிழப்பு: முதல்வர் ஸ்டாலின் நிவாரணம் அறிவிப்பு



திருநெல்வேலி மாவட்டம் திசையன் விளை அருகே நவ்வலடி கிராமத்தில் கடலில் குளிக்கச் சென்ற மூன்று மாணவர்கள் அலையில் சிக்கி உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடற்கரை கிராமமான நவ்வலடியைச் சேர்ந்த மகாலிங்கம் முகேஷ் (வயது 13), இசக்கியப்பன் ராகுல் (வயது 12) , வள்ளிமுத்து ஆகாஸ் (வயது 13) மற்றும் பிரகாஷ் ஆகிய நான்கு பேரும் அங்குள்ள தனியார் பாடசாலையில் படித்து வந்தனர். நேற்று முன்தினம் மாலையில் இவர்கள் கடலில் குளிக்கச் சென்றுள்ளனர்.

எதிர்பாராதவிதமாக 4 பேரும் அலையில் சிக்கி இழுத்துச் செல்லப்பட்டனர். அதில் பிரகாஷ் மட்டும் தத்தளித்து கரைக்கு வந்து சேர்ந்தான். ஏனைய மூவரும் கடலில் மூழ்கி மாயமானார்கள். தப்பிவந்த பிரகாஷ் ஊருக்குள் வந்து விவரத்தை கூறியதும், அப்பகுதி மீனவர்கள் கடலில் 3 மாணவர்களையும் தேடினர். உவரி பொலிஸார், தீயணைப்பு படையினர் மற்றும் கடலோர பாதுகாப்பு படையினரும் தேடும் பணியில் ஈடுபட்டனர். இரவு முழுக்க தேடும் பணி நடைபெற்றது.

இந்த நிலையில், நேற்று அதிகாலையில் 3 மாணவர்களின் சடலங்கள் கோடாவிளை அருகே கரை ஒதுங்கின. இந்த சம்பவத்தால் நவ்வலடி கிராமமே சோகத்தில் மூழ்கியது. அ.தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இன்பதுரை உள்ளிட்டோர் 3 மாணவர்களின் பெற்றோர்களை சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

இந்த நிலையில், உயிரிழந்த மூன்று மாணவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், அவர்களுக்கு தலா 2 லட்சம் ரூபா நிவாரணம் வழங்க உத்தரவிட்டுள்ளார். நிவாரணத் தொகையை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு நேற்று மாலை வழங்கியுள்ளார்.

## யமுனை நதியின் நீர்மட்டம் அதிகரிப்பு!

யமுனை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த கனமழை காரணமாக யமுனை நதியின் நீர்மட்டம் மீண்டும் அதிகரித்துள்ளது.

அதன்படி யமுனை நதியின் நீர்மட்டம் 205.39 மீட்டராக அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புதுடில்லியின் பல்வேறு இடங்களில், குடிநீர் விநியோகம் தடைபடும் அபாயம் ஏற்பட்டு உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சந்திரயான் 3 தொடர்பில் புதிய தகவல்!

சந்திரயான்-3 விண்கலம் நிலவுக்கு மிக அருகில் பயணித்து வருகிறது என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

குறித்த விண்கலத்தை சுமார் 615 கோடி ரூபா செலவில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ வடிவமைத்தது.

இந்த விண்கலம் எல்.வி.எம்-3 ரொக்கெட் மூலம் ஸ்ரீ ஹறி கோட்டாவில் இருந்து கடந்த ஜுலை 14 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மேற்கு ஆபிரிக்க கடலில் நிர்க்கதியான புகலிடக் கோரிக்கையாளர்களின் படகு!



புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிச்சென்ற படகொன்று மேற்கு ஆபிரிக்காவின் கேப் வெர்டே கடலில் நிர்க்கதிக்குள்ளானதில் 60 இற்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

சிறுவர்கள் உட்பட 38 பேர் பாது காப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என தெரிவிக் கப்படுகின்றது. ஒரு மாதமாக கடலில் நிர்க்கதிக்கு உள்ளாகியிருந்த குறித்த படகில் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் செனகல் நாட்டை சேர்ந்தவர்கள் என குறிப்பிடப்படுகின்றது.

இந்த படகு கடந்த திங்கட்கிழமை முதல் தடவையாக அவதானிக்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

படகு மூழ்கியதாக ஆரம்பத்தில் தகவல்கள் வெளியாகியிருந்தாலும், பின்னர் அது கடலில் அலைக்கழிக்கப்பட்ட நிலையில் கண்டறியப்பட்டமை உறுதிப் படுத்தப்பட்டது.

ஸ்பானிய மீன்பிடி படகொன்றினால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த படகு தொடர்பில் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்தே மீட்பு நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டிருந்தது. 101 பயணிகளுடன் கடந்த ஜூலை 10 ஆம் திகதி இந்த படகு செனகலில் இருந்து புறப்பட்டதாக அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சு அறிக்கையொன்றில் தெரி வித்துள்ளது.

## ரஷ்யாவிற்கு ட்ரோன்கள் வழங்குவதை நிறுத்தினால் ஈரான் மீதான பொருளாதார தடைகள் நீக்கப்படும்!

## - அமெரிக்கா அறிவிப்பு




உக்ரைன் – ரஷ்யா போர் நடவடிக் கைக்கு மத்தியில் ஈரானுக்கு அமெரிக்கா சலுகையொன்றினை அறிவித்துள்ளது.

இதன்படி, ரஷ்யாவிற்கு ட்ரோன்கள் வழங்குவதை நிறுத்தினால் ஈரான் மீதான பொருளாதார தடைகளை நீக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈரான் அதன் அதிநவீன ஆளில்லா தாக்குதல் ட்ரோன்களை ரஷ்யாவிற்கு விற்பனை செய்து வரும் நிலையில், ஈரானுக்கு அமெரிக்கா சலுகை ஒன்றை அறிவித்துள்ளது. அதன்படி, ரஷ்யாவிற்கு ஈரான் செய்து வரும் ட்ரோன் விற்பனையை நிறுத்தினால், அதற்கு பதிலாக ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை நீக்கப்படும் என அமெரிக்கா சலுகை வழங்கியுள்ளது.

இதனுடன் தெஹ்ரான் மாஸ்கோவிற்கு ஆளில்லா ட்ரோன்களை விற்பனை செய்வதை நிறுத்துவதுடன், ட்ரோன் தொடர்பான உதிரிபாகங்களையும் ரஷ்யாவிற்கு விற்பனை செய்வதை நிறுத்த வேண்டும் என வொஷிங்டன் வலியுறுத்தியுள்ளது.

## தேவாலயங்கள் மீது தீ வைப்பு!



பாகிஸ்தானின் பைசலாபாத்தில் உள்ள ஜரன்வாலா மாவட்டத்தில் 100 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக் கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள ஒருவர் மத நிந்தனையில் ஈடுபட்டதோடு அங்கிருந்த தேவாலயங்கள் மீது தீ வைப்பு உள்ளிட்ட தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது அசம்பாவிதம் நடக்காமல் தடுக்க பொலிஸார் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுபாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

## ஹவாய் தீவுவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

அமெரிக்காவின் ஹவாய் தீவு மாகாணத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 100 ஐ தாண்டியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது

இதனால், பெரும்பாலான வீடுகள் தீப்பிடித்து எரிந்துள்ள நிலையில் 25 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்கள் தீயில் கருகியுள்ளன.

குறித்த காட்டுத்தீயில் சிக்கி இதுவரை 106 பேர் உயிரிழந்துள்ளதோடு மேலும் 1300 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர்.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அழகில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949